FTD

Register No.

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

**B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.**

(Five-year Regular Course)

Fifth Year / Tenth Semester

## CRIMINOLOGY AND PENOLOGY

Time: Three hours Maximum: 100 marks

### PART A – (3 x 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**

கீழ்க்கண்டவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

1. "Crime causation , analysis and prevention of crime are the chief aims of criminology" – Discuss
"குற்றத்திற்கான காரணங்கள், ஆராய்தல் மற்றும் குற்றம் நிகழாமல் தடுத்தல் இவையே குற்றாய்வியலின் முக்கிய நோக்கமாக உள்ளது" – விவாதிக்கவும்.

2. "Becarria" is the pioneer of Modern Criminology –Examine.
நவீன குற்றாய்வியலின் முன்னோடி என 'பெக்காரியா' கொண்டாடப்படுகிறார் - ஆராய்க.

3. Analyse the causes and remedial measures of offences relating to sexual harassment.
பாலியல் குற்றங்களுக்கு தடுப்பதற்கான காரணங்கள் மற்றும் தீர்வழிகளை ஆராயவும்.

4. Cyber Crimes pose new challenges to Criminal Justice Administration – Explain in detail.
குற்றவியல் நீதி நிர்வாகத்திற்கு இணையவழிக் குற்றங்கள் ஓர் புதிய சவாலாக உள்ளது விரிவான விளக்கம் அளிக்கவும்.

5. Explain the contributions made by the Italian school of criminology.
இத்தாலிய குற்றாய்வியல் பயில் நெறியம் குற்றாய்வியலுக்கு ஆற்றிய பங்கினை விவரிக்கவும்.

### PART B – (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following not exceeding two pages each:
பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்.

(a) Admonition
எச்சரித்து விடுதலை செய்தல்

(b) Recidivism Character
மறுக்குற்றப்பான்மை குணம்.

(c) Female Criminality
பெண்களின் குற்றவினை

(d) Indeterminate punishment
காலம் குறிப்பிடாத தண்டனை

(e) Prison education
சிறைக் கல்வி

(f) Human organ crimes.
மனித உறுப்புகள் தொடர்புடை குற்றங்கள்.

(g) Neo Classical School
புதுப்பண்டைய பயில் நெரியம்.

(h) Victim Compensation
குற்றத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு

(i) International crime.
சர்வதேச குற்றங்கள்

(j) Terrorism
தீவிரவாதம்

**PART C – (4 x 4 =16 marks)**

7. Answer briefly FOUR of the following not exceeding two pages each.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Information Technology Act, 2000.
தகவல் தொழில் நுட்ப சட்டம், 2000.

(b) Dowry Prohibition
வரதட்சிணை தடுப்பு

(c) Santhanam Committee Report
சந்தானம் குழு அறிக்கை

(d) Treatment of Prisoners
கைதிகளை கையாளும் முறை

(e) Theories of Punishment
தண்டனையின் கோட்பாடுகள்

(f) Edwin.H Sutherland
எட்வின்.ஹெச் சதர்லாண்டு

———————

FTF

Register No.

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

# B.A.B.L./B.A.LL.B DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Five-Year Regular Course)

Fifth Year-Tenth Semester

## HUMAN RIGHTS LAW

Time: Three hours | Maximum: 100 marks

### PART A – (3 x 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**
**கீழ்க்கண்டவற்றுள் மூன்றிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**

1. Explain as to how, the existing Human Rights legislations safeguard Human Rights in India.

   இந்தியாவில் தற்பொழுது நடைமுறையில் உள்ள மனித உரிமை சட்டங்கள் எவ்வாறு மனித உரிமைகளை பாதுகாக்கின்றது என்பதை விளக்குக.

2. Compare the provisions of the Human Rights in Indian Constitution with the International Covenant on Civil and Political Rights 1966.

   இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உள்ள மனித உரிமைகள் குறித்த வகையங்களை சர்வதேச உரிமையியல் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கை 1966-உடன் ஒப்பிடுக.

3. Analyse the 'Freedom of Religion' as envisaged under the International covenants.

   சர்வதேச ஒப்பந்தங்களில் 'சமய சுதந்திரத்தைப்' பற்றி கூறப்பட்டுள்ளதை ஆய்வு செய்க.

4. Define 'Refugee' and describe the role of the UN High Commission on Refugee in protecting Human Rights.

   'அகதிகள்' வரையறுத்து அகதிகளின் மனித உரிமையை பாதுகாக்க பன்னாட்டு ஐக்கிய சபை அகதிகள் உயர் ஆணையத்தின் பங்களிப்பினை எடுத்துரைக்க.

5. Write an essay on origin and development of International Humanitarian Law.

   சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின், மூலம் மற்றும் வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை வரைக.

### PART B – (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each:
   பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதவும்.

   (a) State Information Commission
   மாநில தகவல் ஆணையம்.

   (b) Right to food.
   உணவு உரிமை.

(c) Atlantic Charter
அட்லாண்டிக் சாசனம்

(d) European Court of Human Rights
ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம்.

(e) Prem Shankar Shukla *v.* Delhi Administration.
பிரேம் சங்கர் சுக்லா எதிர் டில்லி நிர்வாகம்.

(f) Vulnerable Groups
எளிதில் பாதிப்பிற்கு உள்ளாகுபவர்கள்

(g) The French Revolution
பிரென்ச் புரட்சி

(h) UN Childiren's Fund
ஐ.நா. குழந்தைகள் நிதி

(i) Rights of Aged persons.
முதியவர்களின் உரிமைகள்

(j) Human Rights and domestic jurisdiction.
மனித உரிமையும், உள்நாட்டு ஆள் வரையும்.

**PART C – (4 x 4 =16 marks)**

7. Answer briefly FOUR of the following in not exceeding two pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Right to property
சொத்துரிமை

(b) Right to culture
பண்பாட்டு உரிமை

(c) Linguistic minorities
மொழி சிறுபான்மையினர்

(d) The American Convention on Human Rights
மனித உரிமைகளுக்கான அமெரிக்க உடன்படிக்கை.

(e) Universal Declaration of Human Rights.
சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

(f) State Human Rights Commission
மாநில மனித உரிமைகள் ஆணையம்.

———————

FTE

Register No. | | | | | | | | |

(For the candidates admitted from 2009-2010 to 2015-2016)

# B.A.B.L./B.A.LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021.

(Five-year Regular Course)

Fifth Year-Tenth Semester

## INTELLECTUAL PROPERTY LAW

Time: Three hours — Maximum: 100 marks

### PART A - (3 x 12 = 36 marks)

**Answer THREE of the following in not exceeding six pages each.**

**ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.**

1. Explain the needs to protect Intellectual Property Rights.

   அறிவுசார் சொத்துரிமையை பாதுகாக்க வேண்டியதின் தேவைகளை விளக்குக.

2. Explain the restoration, surrender and revocation of Patents.

   காப்புரிமைகளை திரும்பபெறுதல், ஒப்படைப்பு மற்றும் இரத்து செய்தல் பற்றி விவரி.

3. What is Trademark? What are the objects of the Trademark Act, 1999?

   வணிக முத்திரை என்றால் என்ன? 1999-ம் ஆண்டு வணிக முத்திரைச் சட்டத்தின் நோக்கங்கள் யாவை?

4. Examine the origin and functions of WTO.

   உலக வர்த்தக மையத்தின் தோற்றம் மற்றும் பணிகளை ஆராய்க.

5. Explain the powers and duties of Controller under the Designs Act, 2000?

   2000-ம் ஆண்டு வடிவமைப்பு சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டாளரின் அதிகாரம் மற்றும் கடமைகளை விளக்குக.

### PART B (8 x 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each:

   ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் அளிக்கவும்:

   (a) Anton Piller Order
   ஆண்டன் பில்லர் ஆணை

   (b) Berne Convention
   பெர்ன் உடன்படிக்கை

   (c) Copyright Board
   பதிப்புரிமை வாரியம்

   (d) Distinguish Trademark and Geographical Indication
   வணிகக்குறியீடு மற்றும் புவிசார் குறியீட்டினை வேறுபடுத்து

(e) Essentials of design
வடிவமைப்பின் முக்கிய அம்சங்கள்

(f) Functions of Trademark
வணிகக் குறியீட்டின் செயல்பாடுகள்

(g) Goodwill
நன்மதிப்பு

(h) Acquisition of inventions by Central government
கண்டுபிடிப்புகளை மத்திய அரசு எடுத்துக் கொள்ளுதல்

(i) International Copyright
பன்னாட்டு பதிப்புரிமை

(j) Inventions Patentable and Non Patentable
புதுப்புனைவு பெறும் மற்றும் புதுப்புனைவு பெற இயலாத கண்டுபிடிப்புகள்

## PART – C (4 x 4 = 16 marks)

**Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.**

**பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.**

7. Arun an Employee of "APN Transport (P) Ltd." resigned his job and started a new business in the name of "APN Goods and Carriage Service (P) Ltd." APN Transport (P) Ltd. sued against Arun. Decide.

அருண் என்னும் பணியாளர் தான் பணிபுரிந்து வந்த எ.பி.என். டிரான்ஸ்போர்ட் (பி) லிமிட் எனும் நிறுவனத்திலிருந்து தனது பணியைத் துறந்து "எ.பி.என். குட்ஸ் மற்றும் கேரேஜ் சர்வீஸ் (பி) லிமிட் எனும் பெயரில் புதிய தொழில் ஒன்றினைத் தொடங்குகிறார் ". அருணுக்கு எதிராக எ.பி.ன் டிரான்ஸ்போர்ட் (பி) லிமிட் நிறுவனம் வழக்கிடுகின்றது. முடிவு செய்க.

8. 'A' a registered proprietor of a Design alleges that 'B' by unauthorisedly applying his said design has gained substantially. Discuss the remedies to 'A' under the Designs Act, 2000.

"அ" என்பவர் ஒரு பதிவு பெற்ற வடிவமைப்பின் உரிமையாளர், 'அ' என்பவருக்கு எதிராக தனது வடிவமைப்பை 'ஆ' என்பவர் சட்டவிரோதமாக பயன்படுத்தி பயன் அடைந்துள்ளார் எனக் குற்றம் சுமத்துகிறார். 'அ' என்பவருக்கு வடிவமைப்புச் சட்டம் 2000-ன் கீழ் கிடைக்க கூடிய தீர்வழிகள் என்ன என்று விவரிக்கவும்.

9. Vickram discovered a new gas that already exists in the air and applied for patent for his new product. Discuss its validity.

விக்ரம் என்பவர் ஏற்கனவே காற்றில் கலந்திருக்கும் ஒரு வாயுவை புதிதாக கண்டுபிடித்து அதற்கு காப்புரிமைக்கும் விண்ணப்பிக்கின்றார். இதன் செல்லும் தன்மையை ஆராய்க.

10. Prema is the owner of a reputed Magazine. She publishes a monthly magazine. She employed Rakesh as Chief Editor on a monthly salary. Rakesh writes the articles for the magazine periodically. After one year Rakesh wants to publish all his articles published in the magazine in the form of Book separately. Decide whether Rakesh has committed any infringement.

பிரேமா என்பவர் ஒரு புகழ்வாய்ந்த பதிவிதழின் உரிமையாளர். அவர் மாத இதழ் ஒன்றினை வெளியிட்டு வருகிறார். அவர் ராக்கேஷ் என்பவரை பத்திரிகைத் தலைமைப் பதிப்பாளராக மாத ஊதியத்திற்கு பணி நியமனம் செய்கிறார். ராகேஷ் அந்த பதிவிதழில் போதிய இடைவெளியில் கட்டுரைகள் எழுதி வருகின்றார். ஒரு வருடம் கழித்து அந்த பதிவிதழில் வெளியான தனது கட்டுரைகளைத் தனியாக புத்தக வடிவில் வெளியிட நினைக்கிறார். ராக்கேஷ் ஏதேனும் உரிமை மீறல் புரிந்துள்ளாரா என முடிவு செய்க.

11. Ashwin, who is in America, gets patent on his invention in America in August 2016. Raju an Indian applies on the same invention. Is Raju entitled to get Patent in India?

அஸ்வின் என்பவர் அமெரிக்காவில் தனது கண்டுபிடிப்பிற்கு ஆகஸ்ட் மாதம் 2016-ம் ஆண்டு அமெரிக்காவில் காப்புரிமைப் பெற்றிருந்தார். ராஜீ என்னும் இந்தியர் அதே கண்டுபிடிப்பிற்காகக் காப்புரிமை கோரி இந்தியாவில் விண்ணப்பம் செய்கிறார். ராஜு இந்தியாவில் காப்புரிமை பெறத் தகுதியானவரா?

12. An employee working in company 'X' contracted with another company 'Y' to disclose the secret process being used by his company for the manufacture of a soft drink. Does the company 'X' have any remedy against its employee?

'X' எனும் நிறுவனத்தில் வேலை செய்யும் தொழிலாளி தன் நிறுவனம் தயாரிக்கும் குளிர்பானத்தின் இரகசிய செய்முறையை, மற்றொரு நிறுவனமான 'Y'-க்கு தெரிவிப்பதற்காக ஒப்பந்தம் செய்து கொண்டார். நிறுவனம் 'X'-க்கு தன் தொழிலாளிக்கு எதிராக தீர்வழி உண்டா?

-----------